# DDEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.116/2024**

Deposition of Witness of PW9

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜான்சன்பால் | Calling | : |
| Father/Husband's Name | : தங்கபிரகாசம் | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 02th டிசம்பர் 2025.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

<u>**முதல் விசாரணை:**</u>

நான் 30.06.2023 ம் தேதி உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது கஸ்பாபேட்டையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2022 ம் வருடம் மொடக்குறிச்சி காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது 17.03.2022 தேதி இரவு 7.15 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது ராஜேந்திரன் மனைவி செல்வமணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று நிலைய குற்ற எண்.59/2022 சட்ட பிரிவுகள் 392 இதச ன் கீழான வழக்கு பதிவு செய்து கனம் நீதித்துறை நடுவர் எண்.3 ஈரோடு அவர்களுக்கு புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை அசலையும் துரித தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. ஒரு நகலை புலன் விசாரணை அதிகாரியான திருமதி. தீபா அவர்கள் வசம் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

<u>**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**</u>

சம்பவ இடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 9 கிலோமீட்டர் தூரம் இருக்கும். புகாரை காவல்நிலையத்தில்

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.12.02 11:27:52 +0530

வைத்து எழுதினார்களா அல்லது எழுதி கொண்டுவந்தார்களா என்றால் காவல்நிலையத்தில் வைத்து எழுதினார்கள். புகாரை எழுதியபோது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. நான் பெற்ற புகாரில் எதிரிகளின் அங்க அடையாளம் குறிப்பிட்டும், எதிரிகள் ஓட்டிவந்த வாகனத்தின் பதிவு எண், நிறம் குறிப்பிட்டு புகார் கொடுக்கப்படவில்லை என்றால் டியோ வண்டி என்றும், பச்சை கலர் சட்டை போட்டவர் ஓட்டிவந்ததாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல எதிரிகளின் தோரயமான வயதும் குறிப்பிடப் பட்டுள்ளது. அங்கஅடையாளம் பற்றி குறிப்பிடவில்லை. புகாரை பெற்று நான் முதல் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

2. சந்தேகத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட புகாரை பெற்று எவ்வித விசாரணையும் செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.12.02 11:27:57 +0530